டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

agridoctor.in | 30.10.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 111 | Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

தமிழகத்தில் வரும் 3ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, அக்.29

மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய மிக தீவிர புயல் (அர்னாப்) வடமேற்கு திசையில் நகர்ந்து 28ம் தேதி அதிகாலை 2 மணி முதல் காலை 8 மணி வரையிலான இடைப்பட்ட நேரத்தில் ஆந்திரப்பிரதேசம் மற்றும் ஏனாம் கடற்கரைப் பகுதிகளில், பாபட்லா மற்றும் விசாகப்பட்டினம் இடையே கரையை கடந்தது.

வடமேற்கு திசையில் நகர்ந்து வலுவிழந்து தீவிர புயலாக மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவுகிறது. அடுத்த 6 மணி நேரத்தில் புயலாக வலுவிழக்கக்கூடும். தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி அதே பகுதிகளில் உருவாகக்கூடும். மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகம், காரைக்கால், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் நவமபர் 3ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் 3ம் தேதி கனமழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டது.

மக்காச்சோளத்திற்கு

அறுவடைக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் தகவல்

கோயம்புத்தூர், அக்.29

மக்காச்சோளம் தானியங்களின் ராணி என்று அழைக்கப்படுகிறது, மேலும் இது இந்தியாவில் பயிரிடப்படும் மிகவும் பன்முகப் பயன்பாடு கொண்ட பயிராகும். மனித நுகர்வு மட்டுமின்றி தீவன உற்பத்தி, எரிபொருள் கலவை, மாவுச்சத்து பதப்படுத்துதல் போன்ற பயன்பாடுகளுக்காக இதன் தேவை அதிகரித்து வருவதால் சமீப நாட்களில் முக்கியத்துவம் பெற்று வருகிறது.

வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, இந்தியா 144.08 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இருந்து 550.93 லட்சம் டன் மக்காச்சோளத்தை உற்பத்தி செய்துள்ளது (2025-26). மத்தியப் பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா, பீகார் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை இந்தியாவில் மக்காச்சோளத்தை அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும். சமீபத்தில் பருவமழை குறைந்ததால், காரீஃப் பருவக்காலப் பகுதி கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இயல்பை விடக் குறைவான மழைப்பொழிவு, மக்காச்சோளத்தின் விளைச்சலைப் பாதித்து, அதன் காரணமாகவே சாகுபடிப் பரப்பு குறைந்துள்ளது என்று ஐக்கிய அமெரிக்க வேளாண்மைத் துறையும் சுட்டிக் காட்டியுள்ளது (USDA, 2026).

மக்காச்சோளம் உற்பத்தி செய்யும் இந்தியாவின் முக்கிய மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இங்கு 5.4 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் இருந்து 33 லட்சம் டன் மக்காச்சோளம் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. சேலம், நாமக்கல், பெரம்பலூர், அரியலூர், விழுப்புரம் மற்றும் திருப்பூர் ஆகியவை தமிழ்நாட்டின் முக்கிய மக்காச்சோள உற்பத்தியாளர்களாகும். தமிழகம், உள் மாநில மக்காச்சோள உற்பத்தி மட்டுமன்றி தனது தேவைகளுக்காக பீகார், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட பிற மாநிலங்களைச் சார்ந்துள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இந்திய வானிலை ஆய்வு மையமானது, தென் தீபகற்பப் பகுதியில் வடகிழக்குப் பருவமழை இயல்பை விடக் குறைவான மழையைக் கொண்டுவர வாய்ப்புள்ளது என்று எச்சரித்துள்ளது. எனவே, பருவமழைப் பற்றாக்குறை தமிழ்நாட்டில் மக்காச் சோளத்தின் விநியோகத்தைப் பாதித்து, விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

இந்தச் சூழலில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் வேளாண் பொருளியல் துறையில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு, உடுமலைப் பேட்டை சந்தையில் கடந்த 15 ஆண்டுகளாக நிலவிய மக்காச் சோள விலைகளைப் பகுப்பாய்வு செய்து, சந்தை ஆய்வையும் நடத்தியது.

அதன்படி, அறுவடைக் காலத்தில் நல்ல தரமான மக்காச் சோளத்தின் பண்ணை விலை குவிண்டா லுக்குத் தோராயமாக சுமார் ரூ 2,700 ஆக இருக்கும். அதற்கு மேற்பட்ட விலை ஏற்ற இறக்கங்கள் பீகாரிலிருந்து வரும் மக்காச்சோளத்தின் வரவைப் பொறுத்து இருக்கலாம். எனவே, விவசாயிகள் தகுந்த விற்பனை முடிவுகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்குத் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு, வேளாண் பொருளியல் துறை, வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டுஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 0422-2431405, மின்னஞ்சல் : tndemic @gmail.com தொடர்பு கொள்ளலாம்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை

கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

தேன் பண்ணைக்கு கண்டுணர்வு பயணம் சென்ற பள்ளி மாணவர்கள்

மதுரை, அக்.29

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்று வரும் தொழிற்கல்வி மாணவர்களுக்கான 20 நாட்கள் தேனீ வளர்ப்பு பயிற்சியின் 12 வது நாள் பயிற்ச்சியாக பள்ளி மாணவர்கள் கண்டுணர்வு பயணமாக கடவூர் அருகே உள்ள ஹவாய்வேலியில் உள்ள பீ-க்ளப் (Bee club) தேன் பண்ணையில் உள்ள செயல்பாடுகளை கண்டு பார்த்து மகிழ்ந்தனர்.

பீ-கிளப் (Bee club) உரிமையாளர் பீம்சிங், தேனீ வளர்ப்பு அனுபவத்தை மாணவ மாணவியருக்கு எடுத்துரைத்து செயல் விளக்கம் செய்து காண்பித்தார். இப்பயிற்சியினை வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் முனைவர் கி.சுரேஷ், ஒருங்கிணைத்தார்.

இப்பயிற்சியில் அலங்காநல்லூர், சத்திரப்பட்டி மற்றும் திருவாதவூர் பள்ளியை சேர்ந்த எண்பது (80) மாணவ மாணவிகள் கலந்து கொண்டு இப்பயிற்சியில் பங்கு பெற்று வருகின்றனர்.

மாணவர்களின் கண்டுணர்வு பயணத்தினை ஷைனி ஸ்டார்லிட் இளநிலை உதவியாளர் மற்றும் மாரிமுத்து தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோர் ஏற்பாடு செய்து இருந்தனர்.

இப்பயிற்சிக்கு தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை நிதி உதவி செய்துள்ளது. பயிற்சியானது நவம்பர் 5ஆம் தேதி நிறைவு பெறுகிறது.

கரும்பில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்குநோய் தாக்குதலை கட்டுப்படுத்திட வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, அக்.29

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டார விவசாயிகள் கரும்பு சாகுபடியில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்குநோய் தாக்குதலை கட்டுப்படுத்திட மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து கந்தர்வகோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கந்தர்வகோட்டை வட்டாரத்தில் கரும்பு பயிரானது நடவு மற்றும் மறுதாம்பு பயிர்களாக சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கந்தர்வகோட்டை வட்டார விவசாயிகள் கரும்பு சாகுபடியில் குருத்து மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்குநோய் தாக்குதலினால் ஏற்படும் மகசூல் இழப்பை தவிர்த்திட ஒருங் கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து கட்டுப்படுத்திடு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கரணை நேர்த்தி : ஒரு லிட்டர் தண்ணீருக்கு புரோபிகனசோல் 25 இசி என்ற மருந்து 1 மிலி அளவில் கலந்து 30 நிமிடமும் மேலும், ஒரு லிட்டர் தண்ணீருக்கு இமிடாகுளோபிரிட் 17.5 எஸ்எல் என்ற மருந்து 0.3 மிலி என்ற அளவில் கலந்து 5 நிமிடம் விதை கரணைகளை ஊறவைக்க வேண்டும். தொடர்ந்து வயலில் எறும்பு நடமாட்டத்தை கவனிக்க வேண்டும்.

உடனடியாக எறும்பின் இயக்கத்தை கவனித்த பிறகு தனியாக மூன்று எல்லை வரிசை களில் இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்எல் என்ற மருந்தை 3 மிலி (அல்லது) குளோரோடிரனிலிப்ரோல் 18.5 எஸ்சி என்ற மருந்து 4 மிலி (அல்லது) கிளாதினிடின் 50 டபுள்யூடிஜி 5 கி (அல்லது) ஸ்பைரோடெட்ராமெட் 150 ஓடி 12.5 மிலி (அல்லது) பிளானிகேமிட் 50 டபுள்யூஜி 3 கி இதில் ஏதேனும் ஒன்றை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கரும்பு பூஸ்டர் 1 கிகி, 1.5 கிகி மற்றும் 2 கிகி என்ற அளவில் கரும்பு நடவு செய்த 45, 60, 75 நாட்களுக்கு பிறகு முறையாக இட வேண்டும்.

பொருளாதார வரம்பு நிலையான 10 சதவீதம் மாவுப்பூச்சி தாக்குதல் தென்பட்டால், புரோபிகனசோல் 25 இசி 1 மிலி மற்றும் இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்எல் 0.3 மிலி ஆகியவற்றுடன் ஒட்டும் பசை 1 மிலி அளவில் 1 லிட்டர் நீரில் கலந்து நட்ட 3 ஆம் மாதத்தி லிருந்து 20 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்கவும். தெளிப்பதற்கு முன் தோகை அகற்றுதலை உறுதி செய்யவும். பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களை ஒவ்வொரு மறுதாம்பு பயிர்க்கு பிறகும் மண் அணைக்கும் போது இட வேண்டும்.

கரும்பு பயிரில் காணப்படும் வேர்புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்திட ஏக்கருக்கு ஒரு விளக்குப்பொறி மே முதல் ஜுலை மாதம் வரை வைத்து முதிர்ந்த வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம். 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மிலி இமிடாக்குளோப்பிரிட் 17.8 சதவீதம் எஸ்எல் கலந்து அதனை தாக்கப்பட்ட பயிரின் தூர்பகுதி நன்கு நனையும்படி ஊற்றி கட்டுப்படுத்தலாம் என கந்தர்வகோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆலோசனை தெரிவித்து உள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஈச்சங்கோட்டை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், பணிபுரியும் பயிர் மரபியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் பாண்டியன் பணி ஓய்வு பெற இருப்பதால், அவருக்கு நேற்று ஈச்சங்கோட்டை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சிறப்பு விழா நடந்தது. விழாவில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண்மை கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களின் முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். இந்த விழாவில் அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன் கலந்து கொண்டார். பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் பாண்டியன், வம்பன் ஆராய்ச்சி நிலையத்தில் உளுந்தில் பல ரகங்களை வெளியிட்டுள்ளார்.

வகுப்பறையிலிருந்து கிராமங்களை நோக்கி வேளாண் மாணவர்களின் 80 நாள் களப்பயணம்!

திருச்சி, அக்.29

கிராமப்புற வேளாண்மையின் நடைமுறைகளை நேரடியாக அறிந்து கொண்டு, விவசாயிகளுடன் இணைந்து பணியாற்றும் திறனை வளர்க்கும் நோக்கில், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகளான K.லோகேஷ் பிரியா, M.மகாலெட்சுமி,

M.மதுமிதா, K.மோகனசங்கரி, S.மோகன ஸ்ரீ, T.மோனிகா, R.நர்மதா, N.நிஹறா, K.P.ஷாஜியா சித்தாரா, சௌமியா சிங் மற்றும் K.C.விஸ்மயா ஆகிய 12 மாணவிகள் இப்பயிற்சியில் ARS காட்டுத் தோட்டத்தில் 80 நாட்கள் தங்கிப் பயிற்சி பெற உள்ளனர்.

கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் நடைபெறும் இப்பயிற்சியை முனைவர் T.பார்த்திபன் வழி நடத்துகிறார். பயிற்சியின் தொடக்க நிகழ்வில் மாணவர்களின் விவரங்கள் பெறப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனியாகக் கிராமங்கள் ஒதுக்கப்பட்டன. இப்பயிற்சி, திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர்கள் முனைவர் M.விஜயகுமார், முனைவர் T.ரமேஷ், முனைவர் N.கிருத்திகா, முனைவர் V.K.சத்யா மற்றும் முனைவர் D.ஜானகி ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெறுகிறது.

தொடர்ந்து, மாணவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட கிராமங்களில் களப்பணிகளை மேற்கொள்வதற்காக, சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்களின் தொடர்பு விவரங்கள் வழங்கப்பட்டன. இதன் மூலம் மாணவர்கள் வேளாண் துறை அலுவலர்களுடன் இணைந்து செயல்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

மேலும், இந்த 80 நாள் பயிற்சிக் காலத்தில், மாணவர்கள் கிராமப்புற மக்களின் வாழ்வியல், விவசாயிகளின் தேவைகள், பயிர் சாகுபடி முறைகள் மற்றும் வேளாண் துறையின் செயல்பாடுகள் குறித்து நேரடியாக அறிந்து கொள்ள உள்ளனர். மேலும், விவசாயிகளுடன் கலந்துரையாடுவதன் மூலம் அவர்களின் நடைமுறைச் சிக்கல்களைப் புரிந்து கொண்டு, நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் குறித்து அறிந்து கொண்டு, அவற்றை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்கும் திறனையும் மாணவர்கள் வளர்த்துக்கொள்ள உள்ளனர்.

வகுப்பறைக் கல்வியை வயல்வெளி அனுபவத்துடன் இணைக்கும் இத்திட்டம், மாணவர்களின் செய்முறை அறிவையும், தொடர்புத் திறனையும் மேம்படுத்தி, கிராமப்புற வேளாண் வளர்ச்சியில் திறம்படப் பங்காற்றும் எதிர்கால வேளாண் வல்லுநர்களை உருவாக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரிய, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரமயமாக்குதல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

மதுரை, அக்.29

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் மையிட்டான்பட்டி கிராமத்தில் பெரிய, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரமயமாக்குதல் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியினை கள்ளிக்குடி வட்டார அட்மா திட்ட ஒருங் கிணைப்பாளர் ஜெ.சந்திரகலா தலைமையேற்று தொடங்கி வைத்து வேளாண்மையில் பண்ணைக்கு தேவையான இயந்திரங்களின் தேவைகள் குறித்து விளக்கினார்.

வேளாண்மை அலுவலர் முனைவர் கு.மாரியப்பன் பண்ணை இயந்திரங்களில் பல்வேறு இயந்திரங்களின் வகைகள் குறித்து விளக்கினார். வேளாண் பொறியியல் துறை உதவி செயற் பொறியாளர் திவ்யபாரதி, வேளாண் பொறியியல் துறையில் பண்ணை இயந்திரங்களுக்கான மானிய விபரங்கள் மற்றும் அதனை பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி விளக்கினார். இப்பயிற்சியில் 'கேச் பச்சாவோ அபியான்' என்ற விளைநிலம் காப்போம் இயக்கம் குறித்த விழிப்புணர்வு பற்றிய தகவல்களை வட்டார தொழில்நுட்ப மேலாளர் இந்திராதேவி, விவசாயிகளுக்கு விளக்கினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்களான லாவண்யா மற்றும் யுவராஜ்குமரன் ஆகியோர் செய்திருந்தனர்.

அட்மா திட்டத்தின் கீழ் பயறுவகை சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி

விருதுநகர், அக்.29

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வேளாண்மைத் துறை அட்மா திட்டம் சார்பில் சாத்தூர் வட்டாரத்தைச் சார்ந்த பாப்பாகுடி கிராமத்தில் பயறுவகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை துணை இயக்குநர் மத்திய திட்டம் ஆ.நாச்சியாரம்மாள் தலைமை தாங்கினார். பயறுவகை பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் சாகுபடி முறைகள் பற்றி எடுத்துரைத்தார். வேளாண்மை உதவி இயக்குநர் கு.முத்தையா, இந்நிகழ்ச்சியினை தொடங்கி வைத்து பயறுவகைப் பயிர்களின் பொருளாதார முக்கியத்துவம் மற்றும் மதிப்பு கூட்டுதல் பற்றி விரிவுரை ஆற்றினர். வேளாண் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் கோவிலாங்குளத்திலிருந்து முனைவர் இராமகிருஸ்ணன், வருகை புரிந்து பயறுவகை சாகுபடியில் ரைசோபியம் மூலம் விதை நேர்த்தி செய்தல் மற்றும் பயறுவகை நுண்ணுரம் உபயோகம் செய்வது மற்றும் டிஏபி 2 சத கரைசல் உற்பத்தி மற்றும் இதன் உபயோகம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. வேளாண் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி கிருஷ்ணகுமார், பயறு ஒண்டர் எனப்படும் உரத்தை ஏக்கருக்கு 2 கிலோவை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து பூ பூக்கும் பருவத்தில் தெளித்தால் பூக்கும் திறன் அதிகரித்து காய் பிடிப்பு அதிகரிக்கும் என்று தெரிவித்தார். மேலும் மஞ்சள் தேமல் நோய் மற்றும் இலைப்பேன் தாக்கு தலைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருங் கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை பற்றி எடுத்துரைக்கப்பட்டது. சுப்புலட்சுமி, தோட்டக்கலை திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். சுந்தர்ராஜ், வேளாண் துறை திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் செய்திருந்தனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 | IS 9537

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)	ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)	ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)	ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)	ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

வாழையில் பூச்சி/நோய் தாக்குதலை கட்டுபடுத்துவது எப்படி?

வாழை ஒரு வருமானம் தரும் பயிர். இதில் பூச்சி/நோய் தாக்குதலை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்து விரிவாக பார்ப்போம். மேலும் பருவ மழைக்காலங்களில் தொடர்ச்சியான ஈரப்பதம் காரணமாக பூச்சி நோய் தாக்குதல் போன்ற பிரச்னைகள் வரலாம்.

வாடல் நோய் (பனாமா வாடல் நோய்)

இது ஒரு வகையான பூஞ்சானத்தால் உருவாகும் (FUSARIUM WILT).

அறிகுறி – அடி இலைகள் திடீரென பழுத்து, தண்டு பகுதியானது ஓடிந்து தண்டைச் சுற்றிலும் துணி கட்டியது போல தென்படும். தண்டின் அடிப்பகுதியில் நீளவாக்கில் வெடிப்பு ஏற்படும். கிழங்கை குறுக்கே வெட்டிப் பார்த்தால், செம்பழுப்பு நிறத்தில் வட்டமான வளையங்கள் தெரியும். தாக்குதல் அதிகமாக இருந்தால் பயிரின் வேர்ப்பகுதியை தவிர அனைத்தும் அழித்து விட வேண்டும். அவ்விடத்தில் 2 கிலோ சுண்ணாம்புத் தூளை போட வேண்டும். வேர்ப்பகுதியில் துளையிட்டு 60 மி.லி கார்பன்டைசியம் மருந்து நிரப்பப்பட்ட கேப்சூல் குப்பியை உள்ளே செலுத்த வேண்டும் அல்லது சூடோமோனோஸ் உயிரியல் காரணியாக மேற்குறிப்பிட்ட முறையில் செலுத்த வேண்டும்.

சிக்கடோகா இலைப்புள்ளி நோய் (SIGATOKA LEAF SPOT)

இதுவும் பூஞ்சானத்தால் ஏற்படுகிறது. இலைகளின் ஓரங்களில் மஞ்சள்/கரும் பழுப்பு நிறக்கோடுகள் தோன்றி பின்னர் இலைகள் காய்ந்து, கருகி விடும். இதனால் ஒளிச் சேர்க்கை குறைந்து பழக்குலையின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

தடுப்பு முறை – போர்டோ கலவை அல்லது கார்பன்டைசியம்

1 லிட்டர் நீரில் 1 கிராம் கலந்து இலைகள் நன்றாக நனையும் படி தெளிக்க வேண்டும்.

வாழை அசுவினி (BANANA APHIDS)

வாழை இலையின் சாற்றை உறிஞ்சி செடியை வலுவிழக்க செய்யும். இது வாழை மரத்தில் 'முடி கொத்து' நோய் (BUNCHY TOP VIRUS) என்ற நோயை பரப்புகிறது. இதை தடுக்க ஒரு லிட்டர் நீரில் 2 மி.லி மிதைல் டெமெட்டான், (அ) அசாடிராக்டின் 2 மி.லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

வாழை இலையை தின்னக்கூடிய புழுக்கள்

இவற்றை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் கார்பரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் ஏதேனும் பூச்சி/நோய் தாக்குதல் தென்பட்டால் அருகேயுள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை நாடவும் இல்லாத பட்சத்தில் 1800-180-1551 என்ற கிசான் கால் சென்டர்-ஐ அலைபேசி வாயிலாக தொடர்ப கொள்ளவும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

நெல்லில் உயிர் உரம் மூலம் விதை நேர்த்தி செயல்விளக்கம் அளித்த வேளாண் மாணவர்கள்

திருவாரூர், அக்.29

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், கீழப்பழையூர் கிராமத்தில் நேற்று முன்தினம் கீழ்வேளூர் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் மாணவர்கள் சார்பில் நெல் விதைகளுக்கு உயிர் உரம் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யும் செயல்விளக்கம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் விவசாயிக்கு வே.கி.நந்தகோபால் என்ற மாணவன் செயல்விளக்கம் செய்து காட்டினார். நெல் சாகுபடியில் விதை நேர்த்தி செய்வதன் முக்கியத்துவம், உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் அவற்றால் பயிர்களுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து மாணவர்கள் விளக்கினர்.

விதைப்பதற்கு முன்பு விதைகளுக்கு உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி செய்வதன் மூலம் நாற்றுகளின் ஆரம்பகால வளர்ச்சியை மேம்படுத்தவும், பயிர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் முடியும் என்பதை எடுத்துரைத்தனர்.

மேலும், உயிர் உரங்களில் உள்ள நன்மை தரும் நுண்ணுயிரிகள் பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் கிடைப்பதற்கு உதவுகின்றன. குறிப்பாக, அசோஸ்பைரில்லம் போன்ற உயிர் உரங்கள் வளிமண்டல நைட்ரஜனைப் பயிர்களுக்குக் கிடைக்கக்கூடிய வடிவில் வழங்க உதவுகின்றன. இதனால் வேர் வளர்ச்சி மற்றும் பயிர்களின் வளர்ச்சி மேம்படுவதற்கு வாய்ப்புள்ளது.

விதை நேர்த்தி செய்யும் முறை : தரமான, ஆரோக்கியமான நெல் விதைகளைத் தேர்வு செய்தல்.ஒரு கிலோ நெல் விதைக்கு 10 கிராம் அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தைப் பயன்படுத்துதல். உயிர் உரத்தைச் சிறிதளவு ஆறிய அரிசிக் கஞ்சி அல்லது பரிந்துரைக்கப்பட்ட ஒட்டும் கரைசலுடன் கலந்து கொள்ளுதல்.

இந்தக் கலவையை நெல் விதைகளின் மீது சீராகப் பூசுதல். விதை நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை நிழலில் உலர்த்தி, பரிந்துரைக்கப்பட்ட முறையில் விரைவாக விதைத்தல். விதை நேர்த்தி செய்வதற்கு உயிர் உரத்தின் தயாரிப்பு லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு மற்றும் பயன்பாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் மாணவர்கள் அறிவுறுத்தினர்.

உயிர் உரத்தின் நன்மைகள் : பயிர்களின் ஆரம்பகால வளர்ச்சிக்கு உதவுகிறது. வேர் வளர்ச்சியை மேம்படுத்த உதவு கிறது. மண்ணின் உயிரியல் செயல்பாட்டை ஊக்குவிக்கிறது. இரசாயன உரங்களின் தேவையைச் சமநிலைப்படுத்தும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மைக்கு உதவுகிறது. சுற்றுச்சூழலுக்கு உகந்த சாகுபடி முறைகளை ஊக்குவிக்கிறது.

இந்தச் செயல்விளக்கத்தின் மூலம் விவசாயி நந்தகோபால், நெல் சாகுபடியில் உயிர் உரங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் விதை நேர்த்தி செய்யும் நடைமுறை குறித்து அறிந்து கொண்டார். இந்நிகழ்ச்சி, நெல் சாகுபடியில் உயிர் உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதுடன், விவசாயிகளிடையே நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் எல் நினோ குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

மதுரை, அக்.29

காரைக்குடியில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நான்காம் ஆண்டு வேளாண் மாணவர்கள் தவமுகுந்தன், இதய எல்சன், பிரதீப்

குமார், காமேஸ்வர், கோடீஸ்வர், சிவா ஆகியோர் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு எல் நினோ (El Niño) நிகழ்வு, அதன் தாக்கங்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப் புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை யாசிரியர் நாகராஜன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், எல் நினோ என்ற காலநிலை நிகழ்வு குறித்த அடிப்படை அறிவை மாணவர்களுக்கு வழங்கு வதுடன், அதன் உலகளாவிய தாக்கங்கள், இந்திய வேளாண்மை யில் ஏற்படுத்தும் பாதிப்புகள் மற்றும் மனித ஆரோக்கியத்துடன் அதற்குள்ள தொடர்புகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

நிகழ்ச்சியில், எல் நினோ என்றால் என்ன, அது எவ்வாறு உருவாகிறது, உருவாவதற்கான காரணங்கள் என்ன, உலகின் எந்தப் பகுதிகளில் அதன் தாக்கங்கள் அதிகமாகக் காணப்படு கின்றன என்பன குறித்து மாணவர்களுக்கு விரிவாக விளக்கப் பட்டது. பசிபிக் பெருங்கடலின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடல்மேற்பரப்பு வெப்பநிலை வழக்கத்தைவிட அதிகரிப்பதன் மூலம் எல் நினோ உருவாகிறது என்றும், இது கடல் மற்றும் வளி மண்டலத்திற்கு இடையிலான தொடர்புகளை மாற்றி உலகின் பல்வேறு பகுதிகளில் மழைப்பொழிவு மற்றும் வெப்பநிலை முறை களில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், எல் நினோவின் காரணமாக உலகின் சில பகுதிகளில் வறட்சி, அதிக வெப்பம் மற்றும் காட்டுத்தீ ஏற்படும் அபாயம் அதிகரிக்கலாம்; மற்ற சில பகுதிகளில் வழக்கத்தைவிட அதிக மழைப்பொழிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம் என்பதும் விளக்கப்பட்டது. இத்தகைய காலநிலை மாற்றங்கள் உலகளாவிய உணவு உற்பத்தி, நீர்வளம் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பது குறித்தும் மாணவர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

இந்தியாவைப் பொறுத்தவரை, எல் நினோ நிகழ்வு இந்தியப் பருவ மழையைப் பாதிக்கக்கூடிய முக்கியமான காலநிலை காரணிகளில் ஒன்றாகும். குறிப்பாக, தென்மேற்குப் பருவமழையின் தீவிரம் குறைவதற்கும், மழைப்பொழிவில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவ தற்கும் சில ஆண்டுகளில் இது பங்களிக்கக்கூடும் என்று மாணவர்

களுக்கு விளக்கப்பட்டது. இதனால் மழையை நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

தொடர்ந்து, எல் நினோவின் வேளாண் தாக்கங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. மழைப்பொழிவு குறைதல், நீர்ப் பற்றாக் குறை, மண்ணின் ஈரப்பதம் குறைதல், பயிர்களின் வளர்ச்சி பாதிக் கப்படுதல் மற்றும் விளைச்சல் குறைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பது எடுத்துரைக்கப்பட்டது. மேலும், நெல், மக்காச் சோளம், பருப்பு வகைகள் மற்றும் பிற பயிர்களின் உற்பத்தியில் காலநிலை மாற்றங்கள் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்தும் விளக்கப்பட்டது. கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாடு மற்றும் குடிநீர் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளும் விவசாயத்தைப் பாதிக்கக்கூடும் என எடுத்துரைக்கப்பட்டது.

மனித ஆரோக்கியத்தின் மீதான தாக்கங்கள் குறித்த அமர்வில், அதிக வெப்பநிலை காரணமாக வெப்பச் சோர்வு, நீரிழப்பு மற்றும் வெப்பத் தாக்கம் ஏற்படும் அபாயம் அதிகரிக்கலாம் என்றும், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள் குடிநீர், உணவுப் பாதுகாப்பு மற்றும் பொதுச் சுகாதாரத்தைப் பாதிக்கக்கூடும் என்றும் விளக்கப்பட்டது. வெப்பமான காலநிலையில் போதுமான தண்ணீர் அருந்துதல், தேவையற்ற நேரங்களில் நேரடி வெயிலில் செல்வதைத் தவிர்த்தல் மற்றும் உடல்நலப் பாதுகாப்பு நடவடிக்கை களைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் அவசியமும் வலியுறுத்தப் பட்டது.

மேலும், எல் நினோவால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்ப தற்கான வழிமுறைகள் குறித்தும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. வானிலை முன்னறிவிப்புகளைத் தொடர்ந்து அறிந்து செயல்படுதல், நீர் சேமிப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பை ஊக்குவித்தல், சொட்டுநீர்ப் பாசனம் போன்ற நீர் சிக்கன முறை களைப் பயன்படுத்துதல், வறட்சியைத் தாங்கக்கூடிய பயிர் வகை களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கும் வேளாண் முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இறுதியில், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் நோக்கில் பள்ளிக்கு ஒரு மரக்கன்று வழங்கப் பட்டது. பள்ளி மாணவர்களின் உதவியுடன் அந்த மரக்கன்று பள்ளி வளாகத்தில் நடப்பட்டது. மரங்களை வளர்ப்பதன் அவசியம், அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு மற்றும் சுற்றுச்சூழல் சம நிலையைப் பாதுகாப்பதில் மரங்களின் பங்கு குறித்தும் மாணவர் களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சி, பள்ளி மாணவர்களிடையே காலநிலை மாற்றங்கள் குறித்த அறிவை வளர்ப்பதுடன், வேளாண்மை, மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பைப் புரிந்துகொள்ள உதவும் வகையில் அமைந்தது. மேலும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காலநிலைச் சவால்களை எதிர்கொள் வதிலும் மாணவர்களிடையே விழிப்புணர்வையும் பொறுப்புணர் வையும் ஏற்படுத்தும் பயனுள்ள நிகழ்ச்சியாக அமைந்தது.

விளை நிலம் காப்போம் என்ற தலைப்பில் விழிப்புணர்வு முகாம்

விழுப்புரம், அக்.29

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்தில் உள்ள வளையம்பட்டு கிராமத்தில், வேளாண்மைத்துறையின் சார்பில் விளை நிலம் காப்போம் என்ற தலைப்பில் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இம்முகாமின் நோக்கமாக விவசாயிகளிடையே மண் வளத்தைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழலை மேம்படுத்துதல், மரங்கள் வளர்ப்பதன் அவசியம் நீர் சிக்கனம் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. இதன் ஒரு பகுதியாக, விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன. மரக்கன்றுகளைத் தங்களது வயல்வெளிகள் மற்றும் பொருத்தமான இடங்களில் நட்டு முறையாகப் பராமரிக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப் பட்டது.

மரங்கள் வளர்ப்பதன் மூலம் மண் அரிப்பைக் கட்டுப் படுத்தவும், பசுமைப் பரப்பை அதிகரிக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் முடியும். எனவே, ஒவ்வொரு விவசாயியும் மரக்கன்றுகளை நட்டு வளர்த்து, எதிர்காலத் தலைமுறைக்கு வளமான நிலத்தையும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலையும் வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

Toll Free No. 1800 - 4257333

விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

திருவள்ளூர், அக்.29

திருவள்ளூர் மாவட்ட மூத்த வேளாண்மை அதிகாரி பொ.தி. ராஜேஷ் கூறியதாவது, விவசாயிகள் தங்களிடம் இருப்பு வைத்துள்ள விதை மற்றும் வயல்களில் இருந்து விதை மாதிரிகளை எடுத்து மாவட்டத்தில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி விதைப்பரிசோதனை செய்து விதைக்குவியலின் விதைத் தரங்களான புறத்தூய்மை, முளைப்புத்திறன், பிறரக கலவன் மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றை துல்லியமாக தெரிந்து கொண்டு விதைப்பு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விதைப்பரிசோதனையின் பயன்கள் : விதைக்குவியலின் தரம் அறிவதால் விதையின் அளவு தெரிந்து விதைக்கலாம். விதைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதை தரங்களை விதைகள் கொண்டு உள்ளனவா என அறிந்து கொள்ளலாம். விதை தரம் அறிந்து விதைப்பதால் நல்ல மகசூல் மற்றும் நல்ல வருவாய் கிடைக்கிறது. விவசாயிகளுக்கும், விதை விற்பனையாளர்களுக்கும் விதை உற்பத்தியாளர்களுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் விதைப்பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது.

தற்போது மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து கொண்டிருப்பதால் ஐப்பசி பட்டத்தில் நெல், சோளம் மற்றும் காய்கறிப் பயிர்களான கத்தரி, தக்காளி, வெங்காயம், வெண்டை, பாகல், புடல், செடி முருங்கை, பூசணி ஆகிய பயிர்கள் பயிரிட ஏற்றதாகும். ஒவ்வொரு விவசாயியும் சாகுபடி செய்ய வாங்கும் விதைகளையோ அல்லது தங்கள் கைவசம் உள்ள விதை களையோ விதைப்பதற்கு முன் முளைப்புத்திறன் அறிய விதை மாதிரிகளை விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- மட்டும் ஆய்வு கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் ரகம் குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டுடன் நெல் விதை 50 கிராம், சோளம் உளுந்து, பாசிப்பயறு 100 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், எள், ராகி 25 கிராம், காய்கறிப் பயிர்களான கத்தரி, தக்காளி, மிளகாய் 10 கிராம் வெண்டை, சுரை, பரங்கி, பூசணி, வெள்ளரி 100 கிராம், பாகல், புடல், செடி முருங்கை 250 கிராம் வெங்காயம் 10 கிராம், ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து தங்களது முழு முகவரி உடன் கூடிய கடிதத்துடன் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறவேண்டுமாறு விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் பொ.தி.ராஜேஷ் கேட்டுக்கொண்டார்.

அமிர்தக் கரைசல் தயாரிப்பில் செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருவாரூர், அக்.29

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரத்தில், செயல் படுத்தப்பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) கீழ், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின், ஜெயசூர்யா, பெய்ஸல் ரெப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் மூலங்குடி கிராமத்தில் அமிர்தக் கரைசல் தயாரிப்பு குறித்த செயல்விளக்கத்தை விவசாயிகளுக்கு அளித்தனர்.

இயற்கை வேளாண்மையில் பயன்படுத்தப்படும் அமிர்தக் கரைசலின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விவாதித்தனர்.

அமிர்தக் கரைசல் தயாரிப் பதற்குத் தேவையான மாட்டுச் சாணம், கோமியம், வெல்லம் மற்றும் நீர் உள்ளிட்ட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி அதன் பயன்பாடுகள் எடுத்துரைத்தனர்.

மேலும், அமிர்தக் கரைசல் தயாரிக்கும் முறை, பயிர்களுக்குப் பயன்படுத்தும் முறை மற்றும் மண் வளத்தை மேம்படுத்துவதில் அதன் பங்கு மற்றும் இயற்கை இடுபொருட்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதன் மூலமாக, மண் வளத்தைப் பாதுகாத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த நிலையான வேளாண்மை முறை களைப் பின்பற்றுவதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தினர்.

இந்நிகழ்வின் வாயிலாக, அமிர்தக் கரைசல் மற்றும் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடையே ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் இயற்கை விவசாயி இளங்கோவன் அவர்கள் கலந்துகொண்டார்.

விதை சேமிப்பு வழிமுறைகளும் அதன் முக்கியத்துவமும்

தரமான விகைளை வாங்குவதில் எவ்வளவு கவனம் செலுத்துகிறோமோ அதே அளவிற்கு விதைகளை பூச்சி மற்றும் நோய்களிலிருந்து பாதுகாத்து சேமிப்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

விதைகள் அதன் விதைப்பு பருவம் வரும் வரை விதை விநியோகஸ்தர்கள் மற்றும் விவசாயிகளால் தங்களது இடங்களில் சேமித்து வைக்கப்படுகின்றன. இவ்வாறு சேமித்து வைக்கப்படும் விதைகளில் ஈரப்பதம் குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாக இருந்தால், உதரணமாக கேரட் விதைக்கு 8%, பீட்ரூட் விதைக்கு 9%, முட்டைகோஸ் மற்றும் காலிப்ளவர் விதைருகளுக்கு 7%, முள்ளங்கி விதைக்கு 6%, பீன்ஸ் மற்றும் பட்டாணி விதைக்கு 9% என்ற அளவுகளுக்கு மேல் இருந்தால் எளிதில் பூச்சி மற்றும் நோய் தாக்குதளுக்கு உட்படுவதோடு விதைகளின் முளைப்பு திறனும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

விதைகளை பாதுகாக்கும் முறைகள்

விதைகளை சேமிக்க புதிய கோணிப்பைகள் அல்லது சுத்தமான தீவன சாக்குகளை பயன்படுத்த அறிவுறுத்தப் படுகிறது. விதை சேமிக்கும் குதிர்கள் மற்றும் கிடங்குகளை சுத்தமாக பராமரித்தல் வேண்டும். குப்பைகள், தூசிகள், பூச்சி தாக்கப்பட்ட விதைகளை உடனுக்குடன் அகற்ற வேண்டும். ஈரப்பதத்தை அந்தந்த விதைகளின் தன்மைக்கு தகுந்தாற் போன்று குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் பயிரிடும் காய்கறிகளுக்கு 6 முதல் 9 சதவீதத்திற்குள் இருக்குமாறு நன்கு காயவைத்து சேமிக்க வேண்டும்.

விதை மூட்டைகளை சீரான காற்றோட்டத்துடன், தரையில் அடுக்காமல், கட்டைகளில் மேல் அடுக்க வேண்டும். சுவற்றிலிருந்து 11/2 அடி இடைவெளி விட்டு அடுக்க வேண்டும். ஒரு அட்டியில் மூட்டைகளை ஒன்றின் மேல் ஒன்று அடுக்கி வைக்கும் போது 6 மூட்டைகளுக்கு மிகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். 15 நாட்களுக்கொரு முறை மூட்டைகளில் பூச்சி தாக்குதல் உள்ளதா என கண்காணிக்க வேண்டும்.

எனவே, அவ்வப்போது, விதை விநியோகம் செய்பவர்கள் மற்றும் விவசாயிகள் தங்களது விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் முளைப்புத்திறன் ஆகியவற்றை பரிசோதனை செய்து விவரங்கள் பெற, உதகை, ரோஸ் கார்டனில், தோட்டக்கலை இணை இயக்குநர் வளாகத்தில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் தங்கள் முழு முகவரியுடன் பகுப்பாய்வு கட்டணமாக ரூ.80/- செலுத்தி போதிய அளவு விதை மாதிரிகளை கொடுத்து பகுப்பாய்வு முடிவுகளை பெற்று பயன்பெறுமாறு எஸ்.நவீன், வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், உதகை அறிவுறுத்தினார்.

மருதம் மண்புழு உரம் மற்றும் உயிர் உர உற்பத்தி மையத்தில் வேளாண் கல்லூரி மாணவர்கள் களப்பயணம்!

பெரம்பலூர், அக்.29

பெரம்பலூர் மாவட்டம், அ ம் மா பா ளை ய ம் கிராமத்தில், திருச்சி நாளந்தா வே ளா ண் மை க் கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவர்கள், சு.பாபு, மு.தரணிதரன், கா.தருண், செ.கபீர்தாஸ், சு.நிர்மல்குமார், கு.ராகுல், மு.ரோஹித், செ.கபீர்தாஸ், ர.சாய்ராம், பா.ஷிகாந்த், கோ.சிவக்குமார்மற்றும் தி.தினகரன் ஆகியோர் ஆகியோர், கிராம தங்கல் திட்டம் (RAWE) மூலமாக களப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பிரிவாக, மண்புழு உரம் (vermicompost), மீன் அமிலம் (Fish Amino Acid), பஞ்சகவ்யம் (Panchagavya), இ.எம்.கரைசல் (Effective Microorganisms) மற்றும் வாம் உயிர் உரம் (Vesicular-Arbuscular Mycorrhiza) தயாரிக்கும் முறைகள், அதற்குப் பயன் படுத்தப்படும் மூலப்பொருட்கள் மற்றும் மண்புழு உரத்தின் வேளாண் பயன்பாடுகள் குறித்துமாணவர்களுக்கு வேளாண் அலுவலர் களால் விளக்கமளிக்கப்பட்டது.

மண்புழு உரம் மண்ணின் வளத்தை மேம்படுத்தவும், மண்ணின் கட்டமைப்பைச் சீராக்கவும், பயிர்களின் வளர்ச்சிக்கு உதவவும் பயன்படுகிறது என்பதைமாணவர்கள் அறிந்து கொண்டனர். மேலும், உயிர் உரங்களின் வகைகள், அவற்றின் முக்கியத்துவம் மற்றும் பயிர் சாகுபடியில் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் விளக்கப்பட்டது. உயிர் உரங்கள் மண்ணில் ஊட்டச்சத்துகள் கிடைப்பதை மேம்படுத்தவும், மண்ணின் நுண்ணுயிர் செயல் பாடுகளை ஊக்குவிக்கவும் உதவுகின்றன. ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து, நிலையான வேளாண்மையை மேம்படுத்துவதில் உயிர் உரங்களின் பங்கு குறித்தும்மாணவர்கள் தெரிந்து கொண்டனர்.

இக்களப் பயணம் மூலம் இயற்கை இடுபொருட்களின் உற்பத்தி, அவற்றின் பயன்பாடு மற்றும் விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் வேளாண் இடுபொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் முறைகள் குறித்து மாணவர்கள் நடைமுறை அறிவைப் பெற்றனர்.

நிலவாரப்பட்டியில் தென்னை விவசாயிகளுக்கு காண்டாமிருக வண்டு கட்டுப்பாட்டு முறைகள் குறித்து செயல்விளக்கம்!

சேலம், அக்.29

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரத்திற்குட்பட்ட நிலவாரப்பட்டி கிராமத்தில், கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் (RAWE) கீழ், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவர்கள் லோகேஷ், மதன், மதன்ராஜ், மணிவாசகர், முகேஷ் குமார், முகில் தர்ன், முத்துசீனி சிதம்பரம், நந்தகுமார், நட்ராஜ் ஆகியோர் தென்னை விவசாயிகளுக்குக் காண்டாமிருக வண்டின் தாக்குதல் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.

RAWE திட்டப் பொறுப்பாளர்கள் கோகுல்பிரனேஷ் மற்றும் ஹரிணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், காண்டாமிருக வண்டு தென்னை மரங்களைத் தாக்குவதால் ஏற்படும் பாதிப்புகள், தாக்குதலின் அறிகுறிகளைக் கண்டறியும் முறைகள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

மேலும், காண்டாமிருக வண்டுகளைக் கவர்ந்து பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வாளி பொறி (Bucket Trap) அமைக்கும் முறை, அதன் செயல்பாடு மற்றும் பயன்பாடுகள் குறித்தும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. தென்னை மரங்களைப் பூச்சித் தாக்குதலிலிருந்து பாதுகாக்க, தோட்டத்தைச் சுத்தமாகப் பராமரித்தல், வண்டுகளின் இனப்பெருக்க இடங்களை அழித்தல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தென்னை விவசாயிகள், காண்டாமிருக வண்டு தாக்குதலைக் கண்டறிதல் மற்றும் அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்துப் பயனுள்ள தகவல்களைப் பெற்றனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021
IS 9537

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்

பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)	ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)	ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)	ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)	ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741